★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 ஐப்பசி 23 ஸபர் 3 இதழ் 269

யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-11-83


யாழ். பாஸ்போர்ட் அலுவலகம்:

## விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்

அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடியகல்வு குடிவரவுத் திணைக்களம் கடவுச் சீட்டுக்களுக்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் அலுவலகமாகவே இனிமேல் தொடர்ந்து இயங்கும் என்றும், கொழும்பிலுள்ள குடியகல்வு குடிவரவுத் திணைக்களமே விண்ணப்பதாரர்களுக்குரிய கடவுச்சீட்டுகளை (பாஸ்போர்ட்) அனுப்பி வைக்கும் என்றும் யாழ். மாவட்ட செயலாளரும் யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

யாழ். செயலகத்தில் இலங்கைக் கடவுச் சீட்டுகளுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படுகின்றன என்றும் திரு. தேவ

(8-ம் பக்கம் பார்க்க)

# எதிர்க்கட்சித் தலைவராக அநுரா தெரிவு

## "சிறுபான்மை மக்களின் உரிமைக்கு பாடுபடுவேன்"

(கொழும்பு)

**இலங்கை பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக திரு. அநுரா பண்டாரநாயக்கா (34 வயது) நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனை, சபாநாயகரும் அங்கீகரித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிய திரு. அ. அமிர்தலிங்கம், மூன்று மாதங்களாகத் தொடர்ச்சியாகப் பாராளுமன்றத்துக்குச் சமுகமளிக்காத காரணத்தினால் பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை அவர் இழந்ததுடன், எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் அவர் இழந்துள்ளார்.

திரு அநுரா பண்டாரநாயக்கா வயதில் மிகவும் குறைந்தவர் எதிர்க்கட்சித்தலை பதவிக்கு நியமனம் பெறும் வயதில் குறைந்த பாராளுமன்ற அங்கத்தவர். இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டுபிரதமர்களினது புதல்வரான திரு அநுரா பண்டாரநாயக்கா நேற்று எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்ட பின்னர் பேசுகையில் சிறுபான்மை இன மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதில் தீவிரமாக இயங்குவேன் என்று குறிப்பிட்டார்.

### அநுரா கருத்து

நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கவும் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவும் பாடுபடப் போவதாகப் புதிய எதிர்க் கட்சித் தலைவரும், நுவரெலியா-மஸ்கெலியா இரண்டாவது எம்.பி.யுமான திரு. அநுரா பண்டாரநாயகா கூறியுள்ளார்,

புதிய எதிர்க்கட்சித் தலைவராகச் சுதந்திரக் கட்சி யால்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'இந்திராவை இப்போது அ. தி. மு. க. ஆதரிக்கிறது"

### நம்பிக்கையில்லாப் பிரேரணை தாக்கல்

[சென்னை]

"இந்திரா காங்கிரஸின் கொள்கையை எதிர்த்துவந்த அ.தி,மு க.வினர் இப்போது அதனை ஆதரித்துப் பேசுகின்றனர். இது எதிர்வரும் தேர்தலில் உடன்பாடு செய்துகொள்வதற்காகும்".

இவ்வாறு அ. தி. மு.க. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ஆர்.உமாநாத் கூறினார்.

தமிழ்நாட்டில் திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான மந்திரி சபைக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நேற்று சட்டசபையில் கொண்டுவரப்பட்டது.

இத்தீர்மானத்தினை தி.மு க. உறுப்பினர் திரு. நெல்லைக்குப்பம கிருஷ்ணமூர்த்தி வழிமொழிந்தார்.

தீர்மானத்தை முன்மொழிந்து திரு. உமாநாத் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "1980 தேர்தலில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியினை நிறைவேற்ற அ.தி.மு.க. அரசு தவறிவிட்டது. அத்துடன் அந்த வாக்குறுதிகளுக்கும் எதிராக அரசு செயற்படுகிறது. தேர்தல் காலத்திலிருந்து இந்திரா காங்கிரஸின் கொள்கையை எதிர்த்துவந்த அ. தி. மு.க.வினர் இப்போது அதனை ஆதரித்துப் பேசுகின்றனர். இது எதிர்வரும் தேர்தலில்

[8-ம் பக்கம் பார்க்க]

## வீதி விபத்துக்களைத் தவிர்க்க ஒத்துழைப்புத் தாருங்கள்

### யாழ். பொலிஸ் அதிபர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

அதிகரித்துவரும் வீதிவிபத்துக்களைத் தவிர்ப்பதற்கு மாநகர, நகர, பட்டின சபைகளின் அதிகாரிகளும், பொதுமக்களும், வாகனச் சாரதிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று யாழ். பொலிஸ் அதிபர் திரு. ரி. ஏ. ஆனந்தராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்லூரி, தனியார் கல்லூரி மாணவர்களும் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தாதவாறு போக்குவரத்து விதிகளை அனுசரித்து நடந்து

(8-ம் பக்கம் பார்க்க

## பார்த்தசாரதி இன்று தாயகம் பயணம்

(கொழும்பு)

இரண்டாம் கட்ட விஜயத்தை முடித்துக் கொண்டு இந்திராவின் சிறப்புப் பிரதி

(8-ம் பக்கம் பார்க்க)

## "அத்துமீறி குடியேறியவர்கள் உடன் வெளியேறவேண்டும்"

### பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி

(கொழும்பு)

மதுரு ஓயாத் திட்டப்பகுதியில் அத்துமீறிக் குடியேறியிருப்பவர்களை உடனடியாக வெளியேறி விட வேண்டும் என்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன கேட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்ட ஜனாதிபதி, அவ்வாறு வெளியேறாது தொடர்ந்தும் அங்கு இருந்து தனக்கும் அரசுக்கும் சிக்கலான நிலையை ஏற்படுத்தக் கூடாது என வலியுறுத்தினர். (கு)

யாழ். பல்கலைக்கழக

## உதவி மருத்துவர் இறுதிப் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உதவி மருத்துவருக்கான இறுதிப் பரீட்சை (1983 செப்டம்பர்) முடிவுகள் வருமாறு:

**சித்தி**

செல்வி ஏ. அருளானந்தசிவம், செல்வி பி. சந்திரா. ஏ. சந்திரகுமார் நெவின்ஸ். செல்வி சி. இந்துமதி, செல்வி எஸ். ஜானகி, ஏ. ஜெயாசுதன், செல்வி கே. ஜெகதீஸ்வரி, கே. குகானந்தன்,செல்வி கே. ருகதேவி, ஆர். முரளீமனோகர், செல்வி இ. பத்மராணி, செல்வி பி. வசந்தி, செல்வி பி. புஷ்பமாலா, செல்வி பி. பொன்னு, எஸ் ராமதாஸ், எஸ். ஏ. ஆர். எச் செய்யித் முகமத் மௌலானா, செல்வி பி. செல்லத்துரை, செல்வி எம். எஸ். செல்வரத்தினம், எஸ். சிவகுமார், திருமதி வி.சுவாமிநாதன், செல்வி ரி. ஞானமலர், வி. கெங்காதரன், செல்வி எல். கணபதிப்பிள்ளை, செல்வி கே. மகேஸ்வரி,செல்வி ஜி. பிரபாலினி.

**நூனசித்தி**

பி. அப்துல் நஸீர், கே. கமலநாதன், கே. கணேசலிங்கம், எம். நாகலிங்கம், ரி. சிவலிங்கம், எஸ். தவராசா, கே. வேலாயுதபிள்ளை.


விற்பனை ஆரம்பம் 9-11-83 புதன்கிழமை

BATHROOM FLOOR TILES

குளியலறைத் தரைக்கற்கள்

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாரிய இயந்திரங்கள் கொண்டு, அதி நவீனமுறையில் தயாரிக்கப்பட்ட குளியலறைத் தரைக் கற்களின் விற்பனை ஆரம்பமாகிறது என்பதை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

The Terrazzo Contractors And Consultants

த ரெறேசோ கொன்ருக்ரர் அன் கொன்சல்ரன்

தலைமை அலுவலகம்:
69, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

64, பருத்தித்துறை வீதி,
(சட்டநாதர் சிவன்கோவில் அண்மை)
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(9640)

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

எழுமுள்ளி மானிப்பாய் மேற்கில் சேனைப்புலம் எனப் படும் வீடுகட்டக்கூடிய 6 பரப் புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T. சம்பந்தர் கட்டைப்பிராய்க்கடை (கட் டைப்பிராய்க் குளத்தடி) கோப்பாய் தெற்கு கோப்பாய். 9747

3 பரப்பு காணி தெல்லிப் பழை சந்திக்கும் ஸ்ரேசனுக் கும் அண்மையில் உண்டு. விப ரங்களுக்கு திருமதி சோதி இராசஇரத்தினம் தெல்லிப் பழை சந்தி அல்லது S. P. அழக இரத்தினம் டச்ரோட் தெல்லிப்பழை. 9746

தெல்லிப்பழை தபால்கந் தோர் ஒழுங்கையில் பிரதான வீதிக்கருகாமையில் ஒன்றே முக்கால் பரப்பு காணியும, மின்சார, தண்ணீர் வசதிகளு டன் கூடிய மேல்மாடிவீடும விற்பனைக்குண்டு. விபரங்க ளுக்கு; ஆ. ரவிக்குமார் (சீமெந்து தொழில்சாலைக்கு முன்) பிரதானவீதி காங்கே சன்துறை. 9745

நல்ல நிலையில் Lampairait 2 Sri 9383 ஸ்கூட்டர் விற் பனைக்குண்டு. தொடர்பு; செ. பாலசந்திரன், 24, கன்னா திட்டிவீதி, யாழ்ப்பாணம். 9713

அரியாலை புகையிரத ஸ்ரேச னுக்கு அருகாமையில்வீடு கட் டுவதற்கு ஏற்ற 1½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; நா. அமர சிங்கம், 103, புங்கங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப் பாணம். 9738

யாழ். நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் முதலியன கிடைக்குமிடம் S. S. அபூபக் கர் அன்கோ, 112, கே. கே. எஸ். ரோட். யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா, ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவனியா. 9506

நல்ல நிலையிலுள்ள றிச்சாட் பீரிஸ் கொம்பனித் தயாரிப்பு 250 இரும்புக் கதிரைகள் விற் பனைக்குண்டு. கடிதமூலம் விண்ணப்பிக்கவும், விளம்பர இல: 9663 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9663

5 பரப்பு குடியிருக்கும் காணி மருதனாமடச்சந்தியிலி ருந்து உடுவில் ரோட்டில் 300 யார் தூரத்தில் வலது பக்கத் தில் ரோட்டு முகப்பு தொடர்பு கொள்க. செல்லத்துரை முன் னாள் விதானையார் பண்டத் தரிப்பு. 9749

யாழ். மருத்துவக் கல்லூரி அண்மையில் நல்ல சுற்றுடலில் 1½பரப்பு காணியில் நான்கு அறைவீடு விற்பனைக்குண்டு தொடர்பு;- 43, நெல்லியடி ஒழுங்கை (கோண்டாவில ஒழுங்கை ஊடாக) கொக்கு வில் கிழக்கு, தரகர்கள் கவ னிக்கப்படமாட்டார்கள். 9763

அத்தியடி அம்பலவாணர் வீதியில் 2பரப்புக்காணி விற் பனைக்கு உண்டு. தொடர்பு: ச. திருநாவுக்கரசு, அரசு மோட்டர் வேக்ஸ், 294,பருத் தித்துறைவீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

அச்சுவேலி தெற்கு இராச வீதி, 1ம் கட்டைக்கு அருகா மையில் 7 பரப்புத் தோட்டக் காணி கிணற்று வசதியுடன் விற்பனைக்குண்டு. விபரங் கட்கு உடனே தொடர்பு கொள்க; திருமதி பசுபதி 1ம் கட்டை இராசவீதி, அச்சு வேலி. 9767

நல்லூர் 2ம் குறுக்குவீதியில் 2½பரப்பு காணியில் புதிதாகக் கட்டப்பட்டவீடு ஒன்று விற் பனைக்குண்டு. தொடர்பு: ச. ஜெயக்குமார் கென்வூட் கோப்பி பார் 24, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 9780

## தேவை

எவ்வகை இனங்களாயினும் கிலோ 25/-ரூபாவுக்கு மேற் பட்ட பலவிலைகளில் கோழி களை நேரடியாகவந்து கொள் முதல் செய்யப்படும். விபரங் களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் பரடைஸ். 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Phone: -23131. 9764

பிரபல வியாபார ஸ்தாப னத்திற்கு சுறுசுறுப்பான நேர் மையான ஆண் விற்பனையா ளர் தேவை. 142, ஆஸ்பத் திரிவீதி, யாழ்ப்பாணம். 9772

பெண்களுக்குரிய சகல ஆடைகளையும் வெட்டிதைக்க தெரிந்த கைதேர்ந்த பெண் தையல்காரர் உடன் தேவை 'ஜெகபதி காம்ரெக்ஸ், அந் தோனியார் கோவிலடி மானிப் பாய். 9778

அனுபவம் வாய்ந்த மரக் கடைச்சல் ஆட்கள் தேவை. கமிசன் அடிப்படையில் அல் லது நாட்சம்பளத்தில் வேலை செய்யலாம். நிரந்தர வேலை உண்டு. நா. நவரத்தினம் தச்சுத் தொழிலகம் K. K. S. ரோட், கோண்டாவில் மேற்கு கோண்டாவில். 9768

சிறிய குடும்பத்திற்கு வீடு அல்லது பகுதிவீடு வாடகைக் குத்தேவை. கிராமப்புறங் களும் விரும்பத்தக்கது. விண் ணப்பிக்கவும் விளம்பர இல 9776 மே/பா ஈழநாடு, யாழ்ப் பாணம். 9776

சுருக்கெழுத்து, தட்டெழுத்து. ஆங்கிலம், தமிழ். பயிற்றுவிக்கக் கூடிய ஆசிரியை தேவை. 9-11-83 புதன் 9-00 மணிக்கு காரியாலயத்தில் தகமைச்சான்றுடன் தொடர்பு கொள்ளவும். Director Bitsman Institute Jaffna Rd. Manipay. 9757

மணமகன் தேவை, யாழ்ப் பாண உயர் வேளாள குலத் தைச் சேர்ந்த நைஜீரியாவில் உயர் அதிகாரியாகக் கடமை ஆற்றுபவர் தன்னுடைய அழ கிய நற்குணமுள்ள படித்த சகோதரிக்கு 36 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட உயர்குல வேளாள மணமகனை விரும்புகிறார். ஆசிரியர் அர சாங்க உத்தியோகஸ்தர், தனி யார் துறையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வீடு வளவு, பணம், நகை கொடுக் கப்படும். விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9692 மே/பா

## தேவை

எமது ஹோட்டலை மேற் பார்வை செய்ய (Supervisor) 45-50 வயதுடைய ஆங்கில அறிவுடைய திடகாத்திரமான வர் தேவை. நற்சாட்சிப்பத்தி ரங்களுடன் நேரில் மாலை 3-00 மணிக்கும் 5-00 மணிக்கு மிடையில் சமுகந்தரவும். ஹோட்டல் றெலெக்ஸ், 340, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பா ணம். 9716

## வாடகைக்கு

திருமண வைபவங்களுக்கும் மற்றும் விசேஷங்களுக்கும் றிச்சாட் பீரிஸ் கொம்பனித் தயாரிப்பினால் செய்யப்பட்ட இரும்புக்கதிரைகள் வாடகைக் குக் கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: கலா கிறைண்டிங் மில், திரு நெல்வேலி சந்தி திருநெல்வேலி அல்லது S. கனகலிங்கம் C/o நாகராஜா மாஸ்ரர் முருகன் ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு. 9664

## வகுப்புக்கள்

இலங்கை வானொலியின் நிலைய வித்துவான் திருமதி லீலாவதி இரத்தினசிங்கம் வீணை/வாய்ப்பாட்டு வகுப்புக் கள் நடாத்தவுள்ளார். விப ரங்கட்கு: நேரில் தொடர்பு கொள்ளவும். ''மாரக்காய்'' புலோலி தெற்கு புலோலி. 9752

## கல்வி

அரச அங்கீகாரத்துடன் சர் வதேச முக்கியத்துவம்வாய்ந்த சான்றிதழுக்குரிய வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கா னிச ஒருமாத வகுப்புகள் ஆரம்பமாகின்றன. J. E. C. ஆரியகுளத்தடி. யாழ்ப்பாணம். 9779

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

திருகோணமலை, டொக் யாட் வீதி இல. 443ஐச் சேர்ந்த காலஞ்சென்ற அரியகுட்டி அருணாசலம் என்பவரின் மரணசாதன மில்லாச் சொத்தின் விட யத்தில்,

மரணமெய்தியவர்

அருணாசலம் அருணகுமார் 443, டொக்யாட் வீதி, திருகோணமலை.

மனுதார்

மரணசாதன )

)- இல. 567

நியாயாதிக்கம்)

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற் கிணங்கப் பின்னுறுதிக்கட் டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின் றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ஆந் நாளன்று முற் பகல் 9 மணிக்கு இந்நீதிமன் றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னு திறுதிக் கட்டளைஏன் முற்றுன தாக்கப் படலாகாதென்பதற் குக் காரணங்காட்டுமாறு இத் தால் தேவைப்படுத்தப்படுத் தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**சி. இராமலிங்கம்**
பதிவாளர்

1983ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

## தவறிவிட்டது

சக்கோட்டை - இன்பருட்டி பிரதான வீதியில் ''கூலிங் கிளாஸ்' ஒன்று தவறிவிட்டது. கண்டுஎடுத்து ஒப்படைப்பவ ருக்கு சன்மானம் வழங்கப் படும். சதா. காந்திதாஸன் குமார் அச்சகம், பருத்தித் துறை. 9765

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) சுன்னாகம்

## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் வெற் றிடமாகவுள்ள பிரதம லிகிதர்/ செயலாளர் பதவிக்கு யாழ். மாவட்ட எல்லைக்குள் வசிப் பவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தையும், மற்றும் விபரங்களையும் தலை மைக்காரியாலயத்தில் ரூபா. 2/-செலுத்திபெற்று 25-11-83ந் திகதிக்கு முன்பதாக விண் ணப்பிக்கவேண்டும் சங்கப் பணியாளர்களுக்கு முன் னுரிமை வழங்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
சுன்னாகம், ப. நோ. கூ. சங்கம். சுன்னாகம்.
07-11-83 9771

## விசுவரூபதரிசனமும் சூரன் போரும்

யாழ்ப்பாணம்)
நீர்வேலி கந்தசுவாமி ஆல யத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சண் முகநாதப் பெருமான் சூரபன் மனுக்கு விசுவரூப தரிசனம் அளித்த காட்சி இடம்பெற வுள்ளது.

நாளைபிற்பகல் 3-00 மணிக்கு சுவாமி அம்பாளிடம் வேல் பெறும் காட்சியும், மாலை 6 00 மணிக்கு சூரன்போர் உற்சவ மும் நடைபெறவுள்ளது.

## ''ஒழுக்கம் மேலானது''

(புலோலி)
''மாணவர்கள் சமுதாயம் ஒழுக்கத்தை உயிரிலும்மேலாக மதித்துத் தம் வாழ்வை மேம் படுத்தவேண்டும் இளம் சந் ததியினரின் வாழ்வு சிறக்க இறைபக்தி இன்றியமை யாதது''

இவ்வாறு யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமா ஜப் பொதுச்செயலாளர் திரு. சி. சி. வாதராசா தொல்புரம் அமெரிக்கன் மிஷன் தமிழ் கல வன் பாடசாலையில் நடை பெற்ற கலைமகள் விழாவில் சிறப்புரையாற்றுகையில் குறிப் பிட்டார்.

# நல்ல வீடு

## விற்பனைக்குண்டு

திருநெல்வேலியில் ஒன்றேகால் பரப்பில் நீர், மின்சார வசதிகளுடன் நான்கு அறைகள் கொண்ட நவீன முறையில் அமைக்கப்பட்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.

விபரங்களுக்கு:

**10/7 சிவன்கோவில் வீதி,**
**திருநெல்வேலி.**

9777

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ருதிரோற்காரி ஆண்டு ஐப்பசித்திங்கள் 30-ம் நாள் (16-11-83) புதன்கிழமை இரவு 10-02 மணி முதல் 11-58 மணி வரையுள்ள கடக லக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது சிரேஷ்ட புத்திரன்
செல்வன்
**இராஜேஸ்வரன்**
(கணேசானந்தாஸ் சில்க்பலெஸ், நவீனசந்தை, யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
செல்வி
**இரஞ்சிதமலர்**
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் மணமகள் இல்லத்தில் நிகழவிருக்கும் திருமணத்திற்கும் 19-11-83-ந் திகதி பிற்பகல் 4 மணிக்கு நெடுந்தீவில் உள்ள மணமகன் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொண்டு மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி
அ. வைத்திலிங்கம்,
உபதபாற்கந்தோர்,
நெடுந்தீவு மேற்கு.

திரு. திருமதி
சி. நடராசா,
அனலைதீவு தெற்கு,
அனலைதீவு.

குறிப்பு: இல. 39, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள மணமகனில்லத்தில் இருந்து விசேட மினிபஸ்கள் பிற்பகல் 3-30 மணிக்கு ஊர்காவற்றுறையை நோக்கிப் புறப்படும். ஊர்காவற்றுறையில் இருந்து அனலைதீவிற்கு விசேட படகு சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. (9769)

# 150 பேரின் சடலங்களைக் கொண்ட புதைகுழி கண்டுபிடிப்பு!

**சென்ஜோர்ஜ், நவ. 8**
**கிரனடாவில் 150 பேரின் சடலங்களைக் கொண்ட புதைகுழி ஒன்றை அமெரிக்கவீரர்கள் கண்டுபிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது!**

கிரனடாவில் அண்மையில் இடம்பெற்ற சதிப்புரட்சியின் போது கொல்லப்பட்டவர்களில் சிலர் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாமென்று நம்பப்படுகிறது.

சதிப்புரட்சியின் போது கொல்லப்பட்ட கிரனடாப்பிரதமர் மொறிஸ் பிஷப்பின் சடலமும் இப்புதைகுழியில் இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

இந்தச் சடலங்களை அடையாளம் காணும் முயற்சியில் அமெரிக்கவீரர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

கிரனடாவில் அண்மையில் இடம்பெற்ற சதிப்புரட்சியின் போது சுமார் 200 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாமெனக் கூறப்படுகிறது. (வெ)

## “வளைகுடா நாடுகளில் வல்லரசுகள் போட்டியிலிருந்து விடுபட வேண்டும்’

### அரபு உச்சிமாநாட்டில் தீர்மானம்

லண்டன், நவ. 8
‘‘வளைகுடா நாடுகள் வெளியார் குறுக்கீடுகளிலிருந்தும், வல்லரசுகளின்போட்டியிலிருந்தும் விடுபட்டிருக்க வேண்டும்’’.

இவ்வாறு கோரும் தீர்மானமொன்று ஆறுஅரபுநாடுகளின் உச்சி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

‘‘பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் குழுக்களுக்கிடையே இடம்பெற்றுவரும் சண்டை நிறுத்தப்பட வேண்டும்.

‘‘லெபனான் பிரச்னை சமாதானமான வழியில் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

‘‘ஈரானும்-ஈராக்கும் உடனடியாக யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளவேண்டும்’’. (வெ)

## சீனாவில் நில அதிர்வு 30 பேர் பலி!

பீக்கிங், நவ. 8
சீனாவின் வடகிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற நில அதிர்வின் போது 30 பேர்பலியானதாக அறிவிக்கப்பட்டது.

இந் நில அதிர்வினால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. (வெ)

## பாப்பரசர் தென். கொரியா விஜயம்

சியோல், நவ. 8
பாப்ரசர் அடுத்த ஆண்டு மே மாதம் 3-ம் திகதி தென் கொரியாவிற்கு விஜயம் செய்யவுள்ளாரென்று சியோலில் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதேவேளை பாப்பரசரின் தென்-கொரிய விஜயம் தொடர்பாகத் தீர்மானம் எதுவும் இன்னமும் எடுக்கப்படவில்லையென்று வத்திக்கானில் அதிகாரியொருவர் கூறினார். (வெ)

## கௌஹாத்தி ரயில் நிலையத்தில் குண்டுவெடிப்பு!

### 14 பேர் பலி! 60 பேர் காயம்!

கௌஹாத்தி, நவ. 8
அசாம் மாநிலமான கௌஹாத்தியிலுள்ள ரயில் நிலையமொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவமொன்றில் 14 பேர் பலியானதாகவும், 60 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இச்சம்பவம் குறித்து அசாம் மாநில முதலமைச்சர் கவலை தெரிவித்துள்ளார். (வெ)

## வடலெபனானில் தொடர்ந்து யுத்தம்!

பெய்ரூட், நவ. 8
வடலெபனானில் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தலைவர் யசீர் அரபாத்தின் ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்குமிடையே தொடர்ந்து கடும் யுத்தம் நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டது.

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தவர்கள்தங்கியுள்ளபடாவி அகதிகள் முகாமில் இரு சாராருக்குமிடையே கடும் யுத்தம் நடைபெற்று வருகிறது.

பெய்ரூட்டிலுள்ள அமெரிக்க நிலைகளிலும் கடும்யுத்தம் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த யுத்தத்தைத் தொடர்ந்து பெய்ரூட் விமானநிலையம் மூடப்பட்டுள்ளது. அதேவேளை லெபனானில் இஸ்ரேல் துருப்புகள் தொடர்ந்திருக்குமென்று இஸ்ரேலின் பாதுகாப்புஅமைச்சர் தெரிவித்துள்ளார். (வெ)

## இந்தியா ஊடாகப் போதைப்பொருள் கடத்தல்

### அமைச்சர் முகர்ஜி கவலை

புதுடில்லி, நவ. 8
‘‘மேற்கு நாடுகளுக்கு போதைப் பொருட்களைக்கடத்திச் செல்ல இந்தியாவை ஒரு பிரதானவழியாகப் பயன்படுத்தும் வழக்கம் அதிகரித்து வருகிறது’’.

இவ்வாறு இந்தியநிதியமைச்சர் திரு. பிரணப்முகர்ஜி தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

‘‘போதைப் பொருட்களைக் கடத்திச்செல்ல இந்தியாவை வழியாகப் பயன்படுத்துவதையிட்டு நான் கவலையடைகிறேன். பாகிஸ்தான், நேபாளம், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தே பெருமளவு போதைப் பொருட்கள் கடத்திச் செல்லப்படுகின்றன’’. (வெ)

## கிளிநொச்சி அகதிகள் முகாமில் மூன்று ஜோடிகளுக்கு திருமணம் நடந்தது!

(கிளிநொச்சி)
கிளிநொச்சி குருகுலம் அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ள மூன்று ஜோடி மணமக்களுக்கு சிறப்பான முறையில் திருமணம் செய்துவைக்கப்பட்டது.

ஒருசோடி மணமக்களுக்கு குருகுலம் சர்வசக்திபீட ஆலயத்திலும் மற்ற இருஜோடி மணமக்களுக்கும் கிளிநொச்சி அருள்மிகு முருகன் ஆலயத்திலும் திருமணவைபவம் நடத்திவைக்கப்பட்டது.

இவர்களுக்கான திருமணப் பதிவை கிளிநொச்சி திருமணப் பதிவாளர் திரு. அருளம்பலம் மேற்கொண்டார்.

அகதிமுகாம் நிர்வாகிகளான வே. கதிரவேலு, டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி. ரி. எஸ். தர்மசிங்கம், அ, தாமோதரம்பிள்ளை ஆகியோர் முன்னின்று இத் திருமணங்களை நடத்திவைத்தனர். இத்தம்பதிகள் அனைவரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திரா ஸெயில்சிங் சந்திப்பு

புதுடில்லி, நவ. 8
இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று புதுடில்லியில் ஜனாதிபதி திரு. ஸெயில் சிங்கைச் சந்தித்துச் சுமார் ஒரு மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நாட்டின் பொதுவான அரசியல் நிலைமை குறித்தே இருவரும் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)


விவசாயிகளே!

உங்கள் நெல் வயலில் உண்டாகும் கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவால்புல், ஆடிப்புல், பன்கோரைவகை எல்லாக் களைகளையும் அழிக்க நெல் விதைத்து 7—21 நாட்களுக்கிடையில் பாவியுங்கள்

‘‘பாயர்’’ உற்பத்தியான

3. 4. டி. பி. ஏ. அடங்கிய

‘‘சேர்கோப்பூர்’’

450 மி. லீ.—55 ரூபா. 3.25 லீற்றர்—375 ரூபா மாத்திரமே

நெல் விதைத்து 21 நாட்களுக்கு பின்னர் உண்டாகியகும் சிறுகோரை, சந்தனக்கோரை, முள்ளி கிடைச்சி எல்லா அகன்ற இலைகளையும் அழிக்க பாவியுங்கள்

எம். சி. பி. ஏ. அடங்கிய பாயரின்

(1) ‘‘ஹெடோனல் எம். 60%’’
450 மி. லீ.—55 ரூபா. 2 லீற்றர்—240 ரூபா.

(2) ‘‘ஹெடோனல் எம். 40%’’
450 மி. லீ.— 35 ரூபா

(3) ‘‘ஹெடோனல் D. 55%’’
250 மி. லீ.—55 ரூபா.

ஹெகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, த. பெ. இல: 70, கொழும்பு-10.
தொலைபேசி: 93563.



விற்பனைக்கு

‘‘BREMNER’’ - Double Royal - சிலிண்டர் அச்சுயந்திரம் விற்பனைக்குண்டு. சுவரொட்டிகள் அச்சிடவும் மற்றும்தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடியது.

தொடர்பு:
பொது முகாமையாளர்.
ஈழநாடு, யாழ்ப்பாணம்.

9750

### மணிவாக்கு

''எல்லாக் கருமங்களையும் என் கருவியாக நின்று செய்வாயாக!''
''என்னையே முழுமையாகச் சரணடைவாயாக, உன்னை அனைத்துப் பாபங்களிலுமிருந்து நான் விடுவிப்பேன்.

— கீதை

## நமது நோக்கு

### ஏவுகணைகளும் ஜெர்மன் பிரச்னையும்

மேற்கு ஜெர்மன் பிரதமர் ஹெல்மட் ஹோல் தமது ஆசிய நாடுகள் விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பும் வழியில் இந்தியப் பிரதமர் இந்திராவுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

புதுடில்லியில் பிரதமர் ஹோல் 17 மணித்தியாலங்களே தங்கியிருந்தது, இந்திய விஜயம் அவ்வளவு முக்கியமானதல்லவென்று கருத இடமளிக்கின்றது. இந்தோனேசியா, ஜப்பான் போன்ற ஆசிய நாடுகள் மேற்கு ஜெர்மன் அரசியலுக்கு உகந்ததாயிருக்கலாம்

இருப்பினும் இந்தியப்பிரதமரின் குறுகிய சந்திப்பில் ஏவுகணைகள் விடயம் இடம் பெற்றிருப்பதே எம்மை எழுதத் தூண்டியிருக்கிறது.

அனைத்துலகிலும் பெரும் அமைதியின்மை நீடிக்கின்றது. வல்லரசுகளின் நடவடிக்கைகளே உலகின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றதென்ற அச்சம் பரவி வருகின்றது.

இந்தச் சூழ்நிலையில் 'நேற்றோ' NATO நாடுகள், 'வார்சோ' ஒப்பந்த நாடுகள் இந்த அமளியில் எங்கு நிற்கின்றன என்று மதிப்பிடுவது கடினமல்ல.

அணிசேரா நாடுகள் இந்தக் கட்டத்தில் அசையாத நிலையில் இருக்கமுடியுமா?

இந்தியாவின் தலைமையில் இந்த, இக்கட்டான நிலைமையில் வறியநாடுகள், சிறுநாடுகள், அபிவிருத்தியைக் காணும் நாடுகள் யுத்தத்தை, யுத்த அச்சுறுத்தலை வெறுக்கின்றன.

ஆனால் இவையெல்லாம் அணிவகுத்து, ஒரு குடையின் கீழ் உலக அமைதிக்கு உதவும் அரசியற் கற்புடையவையா? சந்தேகம்

உலக அரங்கில் இடம் பெறும் தலைவர்கள் சந்திப்பு சந்தேகத்தையே கிளப்புகின்றது.

ஆசிய விவகாரங்களை நேரில் கண்டறிய ஜனாதிபதி றீகன் தமது யாத்திரையை ஜப்பானில் இவ்வாரம் தொடங்கி இருக்கிறார்

எங்கள் சின்னஞ் சிறிய நாட்டுக்கே மிகப்பெரிய சீனாவும், அமெரிக்காவும்,— இந்தியாவுங்கூட தங்கள் பிரதிநிதிகளை இன்று அனுப்பியுள்ளன.

இம்மூன்று நாடுகளையும் மும்மூர்த்திகளென்று குறிப்பிடுவதில்அதிகம் தவறில்லை.

அதுமட்டுமல்ல இவர்களின் குடுமிகள் — சும்மா ஆடா?

அது அவ்வாறாக, ஜெர்மனியின் ஆட்சிமாற்றத்தில் பிரதமரான திரு ஹெல்மட் ஹோல் 'நேற்றோ' ஸ்தாபனத்தின் பெரு நண்பர்; அமெரிக்கா தலை அசைக்க, அது நினைத்ததெல்லாவற்றையும் நிறைவேற்றும் சித்தமுடையவரென்றுஎதிர் பார்க்கப்பட்டது; அது இன்று ஏமாற்றத்தில் காணப்படுகிறது.

அமெரிக்காவின் ஏவுகணைகள் மேற்கு ஜெர்மனியில் நிறுவப்படுவதானால் அது எஜமான்ஒருவர் தம்முடைய காணியில் குடியிருப்பவர்களை மதிக்காது தாம் நினைத்தவாறு நடக்கும் செயலை ஒத்தது. இதுவே இன்றைய மேற்கு ஜெர்மன் மக்களின் பொது உணர்வு.

உணர்வு மட்டுமல்ல; பொது அபிப்பிராயமாக உயிர்த் துடிப்புடன் மக்களுக்கு உத்வேகம் ஊட்டி வருகிறது.

எனவே இன்றைய ஜெர்மன் பிரச்னை; ஏவுகணைகள் அல்ல, அவற்றை அமெரிக்கா வருட முடிவுக்கு முன் நிறுவலாம்.

அதனை முந்துவதற்கு சோவியத் ரஷ்யா தனது கணைகளை கிழக்கு ஜெர்மனியிலும் செக்கோசிலவாக்கியாவிலும் நிறுவ தீர்மானித்துவிட்டது.

உலக அழிவுதான் இதன் விளைவென்றாலும், உடனடியாக ஐரோப்பாவே இந்த வல்லரசுப் போட்டிக்கு இரையாகும்.

மேற்குஜெர்மனியைஇன்று வருத்தும் கவலை 'இம்மா பெரும் நாடு சுதந்திரம் இழந்து,சுமார்40 வருடங்களாக இரண்டாகப் பிரிந்துவேற்று நாடுகளின் கைப்பொம்மையாய்விட்டதென்பதே.

ஜெர்மனியின் ராணுவச் செருக்கை, ஹிட்லரின் ஆணவஆதிக்கத்தை அடக்க வெளிக்கிட்ட பிரிட்டன் படுத்துவிட்டது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தில் வெற்றிபெற்ற அமெரிக்காவும் ரஷ்யாவும் இப்பெரும் தேசத்தை பங்கு போட்டன.

அந்த நிலையிலும் உலகின் மிகப்பெரிய செல்வ நாடாக மிகக்குறுகிய காலத்தில் உயிர்த்தெழுந்த மேற்கு ஜெர்மனி ஒன்றுபட்ட சுதந்திர ஜெர்மனியே 'ஏவுகணைகளின்' அச்சுறுத்தலை நீக்க வல்லதென்று நினைக்கிறது.

### சைவ சமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் ஒவ்வொரு வருடமும் ஐப்பசிக் கடைசி வெள்ளியன்று நடத்தப்படும் சமயத் தீட்சை கொடுக்கும் வைபவம் இவ்வருடமும் சபையினரின் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கரணவாய் ஆதீனம் சிவத்திரு கை. திருஞானசம்பந்தக் குருக்கள் அவர்களால் நடத்திவைக்கப்படும். இம்மாதம் 11ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் பாடசாலை மாணவர்கள் உட்பட சகலருக்கும் தீட்சை கொடுக்கப்படும்.

## உயிர்காக்கும் இரத்ததானம்

மனிதர்களாகப் பிறந்தவர் அனைவரும் மகிழ்வுடன் நெடுங்காலம் வாழவே விரும்புவர் நெடுநாள் வாழ்வு நிலைபெற்று விளங்க உடலுடன் உயிரைப் பிணைத்து வைப்பது இரத்தம் என்ற உயிர்த்திரவமே. உடல் வலுப்பெற்ற மக்களனைவரும், உளவலுவும் பெற்று உயர்ந்தவர்களாக உயிர்காக்கும் தர்ம சிந்தையுடையவராக தம்மிடம் இருக்கும் வற்றாத ஜீவ நதியாகிய இரத்தத்தை உயிர் காக்க அளிக்கத் தயங்காதவர்களாயிருப்பின் அவர்களே உலகில் உயர்ந்த உள்ளம் படைத்த தியாகிகளாவர்.

உலகிலே எந்த ஒரு மனிதனும் வேறு ஒருவருக்கு அளிக்கக்கூடிய மிக உயர்ந்த விலை மதிப்பற்ற பரிசு அவனளிக்கும் இரத்தமாகும். உங்கள் உடலில் நாள்தோறும் ஊறிவரும் உதிரத்தினால் அபாயநிலையில் உள்ள ஒரு உயிரை இவ்வுலகில் வாழ வைக்கும் பேருதவியை செய்தீர்களானால் இம்மாநிலமே உங்களை தெய்வமெனப் போற்றும்.

இரத்தமானது இருதயம், மகாநாடிகள், களரி இரத்த நாடிகள், சிறுநாடிகள் ஊடாக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு திரவப்பதார்த்தமாகும். இரத்தச் சுற்றோட்டத்தின் மூலம் உடலின் பலபாகங்களுக்கு பிராணவாயுவும், உணவுப்பொருட்களும் கொண்டு செல்லப்படுவதுடன், இரத்தத்தின் வழியாகக் கழிவுப்பொருட்கள் சிறுநீரகங்கள், சுவாசப்பைகள் ஆகியவற்றிற்கு எடுத்துச்செல்லப்பட்டு அவ்வுறுப்புகளினால் வெளியேற்றபபடுகின்றன. ஒரு கன மில்லி மீற்றர் இரத்தத்தினால் 5000,000 செவ்வணுக்களும், 8,000 வெள்ளை அணுக்களும், 2ு0,000 இலிருந்து 500,000 வரை சிறு தகடு போன்ற அணுக்களும் காணப்படுகின்றன. இரும்புச்சத்துள்ள ''ஹீமோகுளோபின்'' (Haemoglobin) செவ்வணுக்களில் அடங்கி இரத்தத்திற்கு செந் நிறத்தையளிக்கின்றது. சாதாரணமாக 150 றாத்தல் நிறையுள்ள ஒரு மனிதனில் சுமார் 15 போத்தல் இரத்தம் இருக்கின்றது. இந்த இரத்தமானது நாம் உண்ணும் உணவின் மூலம் புதிது புதிதாகத் தோன்றிவரும் திரவப்பதார்த்தமேயாகும்.

பெரிய விபத்தின்போது இரக்கம் இழந்தபின்னும் பிரசவத்தின்பின் சிலசமயங்களில் ஏற்படும் குருதிப்பெருக்கின் பின்பும், கர்ப்பச்சிதைவு காரணமாக ஏற்படும் இரத்தப் பெருக்கின்பின்பும், கடும் நெருப்புக் காயத்தின்பின் காயங்களிலிருந்து அதிக ஊனம் வடியும் போதும் சத்திர சிகிச்சையின்போதும் இரத்தச்சோகையினால் ஏற்படும் இரத்தக்குறைவை நிவர்த்தியாக்கும் ஒருவருக்கு இரத்தம் அளிக்கவேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஏற்படுகின்றது. அவர்கள் இழந்த இரத்தத்தை ஈடுசெய்ய இரத்தத்தையே அளிக்கவேண்டும். இந்நிலையில் இரத்தம் அளிப்பதே தனிச் சிகிச்சையும், உயிர்கொடுக்கும் சிகிச்சையுமாகும்.

எனவே 18-50 வயதிற்கு இடைப்பட்ட கயரோகம், மேகரோகம், செங்கமாரி ஆகிய நோய்களாற் பீடிக்கப்படாத தேகாரோக்கியமுள்ள ஆண், பெண் அனைவரும் அவரவர் நிறைக்கும், இரத்தத்தின் தன்மைக்குமேற்ப இரத்த தானம் செய்யலாம். நீங்கள் மனமுவந்து அளிக்கும் இரத்த தானம் மற்றொருயிரைக்காக்கும் மருந்தாகிறது.

இரத்ததானம் செய்வதனால் உங்கள் உயிரிற்கு யாதொரு தீங்கும் நேராது. நீங்கள் தானமாக அளித்த இரத்தத்திற்குப்பதிலாக புதிய இரத்தத்தை உண்டுபண்ணுவது மட்டுமன்றி இரத்தம் உண்டு பண்ணும் உறுப்புகளிற்கும் அப்பியாசத்தையும் அளிப்பதனால் உடலைப் பொதுவாக சீர்படுத்திக்கொள்வீர்கள். நீங்கள் இழந்த இரத்த அளவை 24—48 மணித்தியாலங்களிலும், கொடுக்கும் போது காணப்படும் இரத்த அமைப்பை இரண்டுகிழமைகளில் சாதாரணமாக உண்ணும் உணவின் மூலம் பெற்றுவிடுவீர்கள். இரத்ததானத்தை மூன்று மாதங்கட்கு ஒருமுறை ஒருவர் செய்யலாம். எனவே தானத்தின் சிறந்த இரத்த தானத்தை தயங்காது மனமுவந்து அளித்து மனிதகுலத்திற்கு மாபெரும் சேவை செய்வீர்களாக!

யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு தினமும் 25 போத்தல் இரத்தம் தேவைப்படுகிறது. நாள்தோறும் வைத்தியசாலைக்குத் தேவைப்படும் இரத்தத்தை நாம் எம்மக்களிடமிருந்தே பெறவேண்டியுள்ளது. எனவே சுகதேகிகளாகிய நீங்கள் அளிக்கும் இரத்தத்தினால் உயிர்பெற்று வாழத் துடிக்கும் நோயாளிகட்கு இதயம் உவந்து இரத்ததானம் வழங்குக!

இரத்ததானம் செய்யவிரும்புவோர் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு வந்து காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை இரத்ததானம் செய்யலாம். அன்றேல் 25 பேருக்கும் குறையாத குழுவினர் ஒரு குறித்த இடத்தில் இரத்ததானம் செய்யவிரும்பின் இரத்தவங்கி அதிகாரிகளுக்கு அறிவித்தால் அவர் அவ்விடத்திற்குவந்து இரத்தத்தை எடுப்பார்கள். இரத்ததானம் செய்யும் ஒவ்வொருக்கும் 10 ரூபா சன்மானம் உடன் வழங்கப்படும்.

நீங்கள் மனமுவந்தளிக்கும் இரத்ததானம் இயமனுடன் போராடும் இளைஞன் ஒருவனை மீளவும் இவ்வுலகில் வாழ

(5ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### சந்தையின் பரிதாபநிலை

யாழ்ப்பாண மாநகர மக்களுக்கும் அண்மைய கிராமங்களுக்கும், அதிகாலையிலேயே மலிவு விலையில் காய்கறிகளைப் பெற்றுக் கொடுக்கும் பாரிய சந்தை திருநெல்வேலி சந்தியிலே அமைந்திருக்கும் சந்தையாகும். தற்போது பெய்யும் மழைகாரணமாக வியாபாரிகளும் பொதுமக்களும் படும் கஷ்டம் சொல்லத்தரமன்று. இன்னமும் வரப்போகும் பெரும் மழை காலத்தில் வெள்ளத்திலேயே வியாபாரம் செய்யும் கட்டம் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த அளவிற்கு சந்தை பூராவும் வெள்ளமும் சேறும் சகதியும் மண்டிக்கிடப்பதைக் காணக்கூடியதாக விருக்கிறது. அத்துடன் வியாபாரிகள் தங்கள் சொந்த சாக்குகளால் கட்டப்பட்ட கொட்டகைகளின் கீழ் நனைந்து கொண்டு சுகாதாரமற்ற சேறு சகதிக்குள் இருந்து வியாபாரம் செய்கிறார்கள். பல்லாயிரக் கணக்காக தினமும்வரும் மக்களுக்கு வசதியான மலசலகூடமும் இல்லாததும் பெரும்குறையாகும்.

அத்துடன் சனசந்தடிமிக்க காலைப்பொழுது சந்தைக்கு எதிரில் உள்ளவீதியில் லொறிகள் மூலம் வியாபாரம் செய்வதால் பாதசாரிகளும் அண்மையில் உள்ள பல்கலைக்கழக பல் தொழில் நுட்ப மற்றும் கல்லூரி மாணவர்களும் பலவித போக்குவரத்துக் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள். இவற்றுக்கெல்லாம் நல்லூர் உப அபிவிருத்திசபை அலுவலகமும், நல்லூர் உதவி அரசாங்க அதிபரும் உடன் நடவடிக்கை எடுத்து மக்கள் குறைதீர்க்க வேண்டும்.

க.சி. இராஜேஸ்வரன்
நல்லூர்.

## சண்முக தோத்திரம்

சிவந்தரு திருவே போற்றி
சிவக்கன லுருவே போற்றி
நவந்தரு நலனே போற்றி
ஞான பண்டிதனே போற்றி
பவந்தரு பயனே போற்றி
பரந்தநீற் றழகா போற்றி
தவந்தரு தகையே போற்றி
சண்முகா போற்றி போற்றி.

எண்ணுமுன் வருவாய் போற்றி
ஏசற விசைப்பாய் போற்றி
பண்ணுறு பதத்தாய் போற்றி
பற்றினை யறுப்பாய் போற்றி
நண்ணுறு நயத்தாய் போற்றி
நற்றவர்க் கினியாய் போற்றி
தண்ணுறு விழியாய் போற்றி
சண்முகா போற்றி போற்றி

மாமறை யுரைத்தாய் போற்றி
மாயவன் மருகா போற்றி
காமரு கழலாய் போற்றி
கங்கையிற் றவழ்ந்தாய் போற்றி
நாமமா யிரத்தாய் போற்றி
நான்முகன் நலத்தாய் போற்றி
தாமரை முகத்தாய் போற்றி
சண்முகா போற்றி போற்றி.

சூரசங் காரா போற்றி
சுப்பிர மணியா போற்றி
வீரருள் வீரா போற்றி
விரைகமழ் தாரா போற்றி
ஆரருள் மருந்தே போற்றி
அடியவர்க் கருளே போற்றி
சாரருந் தவமே போற்றி
சண்முகா போற்றி போற்றி.

— ச. தங்கமாமயிலோன்

## "சற்றர்டே றிவ்யூ' பத்திரிகைத் தடையை நீக்குமாறு உத்தரவிடவேண்டும்"

### உயர் நீதிமன்றத்தில் நடேசன் கியூ. சி. வாதம்

(கொழும்பு)

''அவசரகாலச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு, அரசியல் காரணங்களுக்காகவே 'சற்றர்டேறிவயூ' பத்திரிகைக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத்தடையை நீக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிடவேண்டும்.''

இவ்வாறு 'சற்றர்டேறிவ்யூ' பத்திரிகைத் தடையை ஆட்சேபித்து மனித உரிமைமீறல் ஷரத்தின்கீழ் தாக்கலாகியுள்ள மனுமீதான விசாரணையின்போது உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்தும் சட்டவாதம் நிகழ்த்துகையில் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். நடேசன் கியூ. சி. தெரிவித்தார்.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான திரு. ஆர். எஸ். வனசுந்தர, திரு. பி. எஸ். சி. ரத்வத்த, திரு. ஜே. எப். ஏ. ஸோஸா, திரு. பாரிந்த ரணசிங்கா, திரு. எச். ஞெட்றிக்கோ ஆகியோர் முன்னிலையில் இவ்விசாரணை நடைபெற்றுவருகிறது.

அவசரகாலச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லையென்றும், நாட்டின் அமைதிக்குக் குந்தகம் ஏற்படும் விதத்தில் செய்தி வெளியிட்டதாலேயே இப்பத்திரிகைக்குத் தடை விதிக்கப்பட்டதாகவும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் அசீஸ் தமது சட்டவாதத்தில் தெரிவித்தார்.

இம்மனுவில் பிரதிவாதிகளாக தகுதி வாய்ந்த அதிகாரியும், பொலிஸ் மா அதிபரும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவை ஆதரித்து சட்டத்தரணிகளான எஸ். மகேந்திரன் ஆர். எச். எம். ரீஸா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகும் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். நடேசன் கியூ. சி. தமது சட்டவாதத்தை தொடர்ந்து நிகழ்த்துகிறார்.

அரசு தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் தமது சட்டவாதத்தை நிகழ்த்தி முடித்தார். (வெ)

---

### உயிரைக்காக்கும்...

(4-ம் பக்கத் தொடர்சி)

வைத்து அவன் அன்னையின் மனம் மகிழச்செய்யும், கணவனுயிரைக்காப்பாற்றி மனைவிக்கு மாங்கல்யப்பிச்சையளிக்கும், அனுதையாகிவிடவிருந்த பிள்ளைக்கு தாயை மீட்டுத் தரும்.

---

### எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு

## அநுராவை சிபார்சுசெய்ய சுதந்திரக்கட்சி முடிவு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியின் 2வது எம். பி. திரு. அநுரா பண்டாரநாயக்காவைச் சிபார்சு செய்வதென்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றக்குழு தீர்மானித்துள்ளது.

இம்முடிவை சிறிலங்காசுதந்திரக்கட்சியின் மத்தியகுழுவும் அங்கீகரித்துள்ளது.

இது பற்றி பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திரு. அநுரா பண்டாரநாயக்கா 1977ம்ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது நுவரெலியா -மஸ்கெலியா தொகுதியின் 2-வது எம். பி. யாகத்தெரிவு செய்யப்பட்டார்.

தமிழர்விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் பாராளுமன்றத்திற்குச் செல்லாததால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும், காங்கேசன் துறை எம். பி. பதவியையும் இழந்தமை தெரிந்ததே. (வெ)

---

## எக்ஸ்-றே இயந்திரம் மந்திகைக்கு விரைவில்!

(புலோலி)

மந்திகை அரசினர்வைத்தியசாலைக்கு இன்னும் இரண்டு மாதங்களுக்குள் ''எக்ஸ்றே படம்பிடிக்கும் யந்திரம் வந்து சேர்ந்துவிடுமென சுகாதாரத் திணைக்கள களஞ்சியப்பகுதி பிரதி அத்தியட்சகர் டாக்டர் சி. கே. துரைரத்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இவ்வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட உள்ளக மருந்தகத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட உறுதிமொழியை உத்தியோகபூர்வமாக அறிவித்தார். இவ் உள்ளக மருந்தகத்திறப்புவிழாவிற்குப் பருத்தித்துறை மாவட்டவைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் தலைமை தாங்கினுர்.

---

### அதிபர்களுக்கு மகஜர்

(பண்டத்தரிப்பு)

இலங்கையைவிட்டு சம்பளத்துடன் கூடிய லீவு பெற்ரூே அல்லது சம்பளமற்ற லீவு பெற்ரூே அண்மையில் வெளிநாடுகளுக்கு சென்றுள்ள ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். கல்வித்திணைக்களம் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் கேட்டுள்ளது.

---

### நைஜீரியா பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழப்பாணம் மத்திய கல்லூரியில் நீண்டகாலம் பௌதீக ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. சி. கேசவராஜன் நைஜீரியாவின் கானுே மாநிலத்தில் சிரேஷ்ட விஞ்ஞான விரிவுரையாளராகப் பதவியேற்று அங்கு பயணமானுர்.

இவர் யாழ். மத்திய கல்லூரியில் சிரேஷ்ட விஞ்ஞானப் பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றினுர். (மா)

---

### நோயாளி கண்ட கனவு!

(யாழ்ப்பாணம்)

மேல்மாடி வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு நோயாளி இரவில் கனுக்கண்டு எழுந்துஓடிய போது தவறி நிலத்தில் விழுந்து பலத்த காயமடைந்தார்!

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் மன்னுரைச் சேர்ந்த ஒருவர் சிகிச்சைக்காக 6ம் வார்ட்டு மேல் மாடியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

நேற்று முன் தினம் இரவு கனவ கண்டு கட்டிலைவிட்டு இறங்கி ஓடினுரென்றும், திடீரென கீழே தவறி விழுந்தாரென்றும் கூறப்படுகிறது. வேறு ஒரு வருத்தத்திற்கு சிகிச்சை பெற வந்த இவர் தற்பொழுது நாரியில் பலத்த அடிபட்டு அதற்கும் சிகிச்சைபெற்று வருகிறுர். (க)

---

### கந்தசஷ்டி விழா

(சுழிபுரம்)

சுழிபுரம் - பறுளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் கந்த சஷ்டி திருவிழா கடந்த சனிக்கிழமை முதல் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தினமும் பகல் சண்முக அர்ச்சனை நடைபெற்றுவருகின்றது.

கந்தசஷ்டிப் படிப்பு சுழிபுரம் யோகி, கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெறுகிறது. தினமும் மாலை கந்தசஷ்டி திருவிழா இடம்பெறுகிறது. நாளை வியாழக்கிழமை பிற்பகல் சூரன்போர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

---




உங்களது எதிர்கால செல்வச் செழுமைக்கு வழிகோலுவது

லட்சுமி லாபமுதலீட்டுத் திட்டம்

| மாத தவணை ரூ. | 50 மாதங்கள் நீங்கள் செலுத்தும் மொத்ததொகை | காலமுடிவில் திரும்பப் பெறும் மொத்த தொகை 72 மாதங்கள் ரூ. | 96 மாதங்கள் ரூ. | 120 மாதங்கள் ரூ. |
|---|---|---|---|---|
| 25 | 1500 | 2230.03 | 2771.04 | 3442.29 |
| 50 | 3000 | 4460.07 | 5542.08 | 6884.58 |
| 100 | 6000 | 8920.14 | 11084.16 | 13769.16 |
| 200 | 12000 | 17840.28 | 22168.32 | 27538.32 |
| 500 | 30000 | 44600.70 | 55420.80 | 68845.80 |
| 1000 | 60000 | 89201.40 | 110841.60 | 137691.60 |




உங்கள் சேமிப்பு சிறிது சிறிதாக சீராகச் சேர்ந்து கணிசமான தொகையாக வளர எங்களது லட்சுமி லாப முதலீட்டுத் திட்டத்தில் சேமிப்பிடுங்கள். இத்-திட்டத்தில் சேமிப்பதன் மூலம் நீங்கள் பெரிய தொகையைச் சேர்க்க முடியும். ஏனெனில் உங்கள் சேமிப்பு கவர்ச்சியான வட்டி விகிதத்தையும் கணிசமான மொத்த தொகையையும் தருகின்றது.

தமிழர் நிதியம் நிதி நிறுவனம்

140 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
140 NAVALAR ROAD, JAFFNA.

தொலைபேசி TELEPHONE } 22437 இலங்கை. SRILANKA.

உங்கள் நிரந்தர முதலீட்டுக்கு 36% அதீத வட்டி வழங்கும் ஒரேயொரு நிதிநிறுவனம்



## தங்க சுரங்க அதிர்ஷ்ட முதலீட்டு திட்டம்

01-11-1983-ல் நடைபெற்ற பரிசிழுப்பில் பரிசு பெற்ருேர்

1. திருமதி அ. கதிர்காமநாதன் இல. 000389
   இணுவில் மேற்கு, இணுவில்.
2. திரு. சி. நேசராசா 001167
   திருக்கேதீஸ்வரம்.



வருடமொன்றுக்கு உங்கள் பணத்துக்கு

26% தொடக்கம் 30% வரை

வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.
குறைந்த தொகை ரூபா 1000/-
எந்நேரமும் அறிவித்தலின் பின்
முழுப்பணத்தையும் திருப்பிப் பெறலாம்.

விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23698

# கிளிநொச்சி இளைஞர் யுவதிகளுக்கு
# இலவசமாக தொழில்பயிற்சி!

(கிளிநொச்சிநிருபர் கே. வி.கே. திருலோக மூர்த்தி)

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள இளைஞர் யுவதிகள் சுய தொழில்வாய்ப்புப் பெறும் நோக்குடன் பல்வேறுதொழில் பயிற்சிகளை இலவசமாக வழங்க கிளிநொச்சி, பரந்தன் ரோட்டறிக் கழகம் முன்வந்துள்ளதாக பிரஸ்தாப கழகத் தலைவர் டாக்டர் ந,சிறீதரன் தெரிவித்தார்.

டாக்டர் சிறீதரன் மேலும் தெரிவித்தாவது:

இத்திட்டத்தின் முதல்கட்ட நடவடிக்கையாக இலவச மின் இணைப்புபாட போதனையும்பயிற் வகுப்புகளும் விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் இப் பயிற்சியில் சித்தியடைவோருக்கு கிளிநொச்சி பரந்தன் ரோட்டறிக் கழக சான்றிதழும் சிறப்பு சித்தியடைவோருக்கு சர்வதேச ரோட்டறிக் கழக சான்றிதழும் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மின்சாரசபை பொறியியலாளர் ரோட்டேறியன் வி. இராசேந்திரன், பரந்தன் இரசயான தொழிற்சாலை மின்முகாரி ரோட்டேறியன் பி சேகரம், தொழிலதிபர் செல்லையா சிவசாமி ஆகியோர் இத்திட்டம் வெற்றிபெற உதவ முன்வந்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து பல பயிற்சித்திட்டங்களை இலவசமாக நடைமுறைக்கு கொண்டு வந்து சுயதொழில் வாய்ப்புக்கு ஊக்கமளிக்க திட்டமிட்டுள்ளதாகவும் டாக்டர் சிறீதரன் மேலும் தெரிவித்தார்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | இன்றையநிகழ்ச்சிகள் |
| 6-02 | 'பிக் புளூமாபிள்'- சிறுவர் கல்வி நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-30 | சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 7-00 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | தகவல் நிகழ்ச்சி |
| 7-45 | கொரியத் தேசிய நடனங்கள் |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-30 | தொலைக்காட்சி நாடகம் |
| 9-00 | 'காசேதான் கடவுளடா' தமிழ் திரைப் படம் |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | தமிழ் திரைப்பட தொடர்ச்சி |
| 11-30 | ஒளிபரப்பு முடிவு. |

## ஸ்கந்த சஷ்டி

(யாழ்ப்பாணம்)

இன்று வண்ணை - ஸ்ரீ செந்தில் கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் காலை ஸ்நபனாபிஷேகமும் பூஜையும் தொடர்ந்து திருச்செந்தூர் புராணபடனமும் மாலை சந்தனக் காப்புச் சாத்தப்பெற்ற செந்தில் கதிர்வேலவனுக்கு நியாச பூர்வ ஷண்முகார்ச்சனையும் வசந்த மண்டப பூஜையும் பெருமான் உள்வீதி வலம்வருதலும் நடைபெறும்.

# "நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துக"
## ஜனாதிபதியிடம் கோரிக்கை

(புலோலி)

திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஆங்கிலப் பயிற்சி நெறிக்கான நேர்முகப்பரீட்சைக்கு வட பகுதியிலிருந்து விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள்பலர் நேர்முகப்பரீட்சையையும் பதிவு செய்தலையும் யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் நடத்துமாறு மகஜர் மூலம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் கோரியுள்ளனர்.

இவ் ஆங்கிலப் பயிற்சிநெறிக்கான நேர்முகப்பரீட்சைக்கும் பதிவு செய்தலுக்கும் 'நாவல' என்னும் இடத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டிருந்தனர். இன்றைய நிலையில் இந்நேர்முகப் பரீட்சைக்குச்செல்ல முடியாமல் இருந்த வடபகுதி விண்ணப்பதாரிகள் இந்நேர்முகப் பரீட்சையையும் பதிவு செய்தலையும் யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் நடத்துமாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவை மகஜர் மூலம் கேட்டுள்ளனர். (கு)

# 'பனையின் நன்மைகள் அனைத்தையும் பெறவேண்டும்

(புலோலி)

'எமது மக்களின் சுபீட்ச வாழ்விற்கென இறைவனால் அளிக்கப்பட்ட கற்பகதரு பனைமரமாகும். இப்பனை மரத்தின் மூலம் பல்வேறு பயன்களையும் உணவுப்பொருட்களையும் மனிதன் வாழ்நாள் முழுவதும் பெற்றுக்கொள்ள முடியும். எனவே பனை வளத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தி அவற்றிலிருந்து பெறக்கூடிய நன்மைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு, பனம் விதை நடுகைவாரத்தை முல்லைத்தீவில் ஆரம்பித்துவைத்து உரையாற்றிய முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் குறிப்பிட்டார். முல்லைத்தீவுக் கச்சேரிவளவில் அரசாங்க அதிபர் திரு. ஞானச்சந்திரன் முதலாவது பனம்விதையை நாட்டி வைத்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது.

தமிழ்மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் பனையாகும். பனை இன, மத, சாதி பேதமின்றி எல்லோருக்கும் பயன்பட்டு வாழ்க்கைக்கு உதவுகின்றது. இயற்கையாகவே எவ்வித சூருவளிக்கும் தாக்குப் பிடித்து அவற்றைத் தடுக்கக் கூடிய பனைமரம் எமக்குக் கிடைத்திருக்கிறது பெரும் தென்னைமரம் வளையக்கூடியது. ஆனல் பனைமரமோ ஒரு நீதிபதிபோன்று நேராக வளர்ந்து எவருக்கும் எதுவித பாகுபாடும்காட்டாது பயன்தருகிறது.

மேலதிக அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம், உதவி அரச அதிபர்களான திரு. வி. சிங்காரவேல், திரு எஸ். ஜெயசிங்கா, கச்சேரி உதவியாளர் திரு. எஸ். ராகுநாதபிள்ளை, முல்லைத்தீவு மாவட்ட பனம் பொருள் அபிவிருத்திச்சபை இணைப்பு அதிகாரி திரு. ஏ. அற்புதராசா ஆகியோரும் பனைவிதைகளை நாட்டினர்.

# இன்றைய பலன்

ஐப்பசி 23-ம் திகதி
புதன்கிழமை
(9-11-83)

மேடம்: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலை தூக்கும் புத்திரர்களால் புகழும் கிடைக்கும் இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும் மெத்தவும் பொருள் சேரும் மேலடத்து ஆதரவு பெருகும்.

இடபம்: நம்பிக்கைமோசடி நடக்கும் நண்பர் ஒருவர் உமது காலை வாரிவிட முனைவர் செலவுகள் கூடுதலாக இருக்கும் எதிர்பாராத இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு.

மிதுனம்; கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் இடம் பெறும் எதிர்ப்புக்கள்மறைந்து எதிலும் சாதகமான முடிவு காணப்படும் கண்ணியம் சேரும் கௌரவம் உயரும்.

கடகம்: எதிர்பார்த்த தினங்களில் தடைகள் ஏற்பட்டு வரும் தொழில்துறையில் அவ்வளவு திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை நண்பர்களின் எச்சரிப்பு அதிகரிக்கும் பிறந்தகத்தின் நினைவு உருவாகும்.

சிங்கம்: பொருளீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர் எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர் மக்களால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு சிலருக்கு உத்தியோக உயர்வுண்டு.

கன்னி: வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் தென்படும் தொழில்துறையில் மேலதிகாரிகளின் ஆதரவு பெருகும் சிலர் வாழ்க்கையில் விருந்து உபசாரமும் நடைபெறலாம்.

துலாம்: எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள் மனதில் புதிய எண்ணம் வட்டமிடும் உல்லாசப்பயணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம் பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படும்.

விருச்சிகம்: வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றும் கடன் தொல்லைகள் அதிகரிக்கும் நண்பர் ஒருவர் காலைவாரி விடக் கூடும் சிந்தனையை ஒரு வழிப் படுத்தி செயலாற்றவும்.

தனு: ஆமை வேகத்தில் சதித்திட்டம் உருவாகும் பகைவர்களின் சூழ்ச்சி பலமாக இருக்கும் காணித் தொல்லையினால் கடன்பட நேரிடலாம் குடுப்பத்தில் பிரிவுக்கும் இடமுண்டு.

மகரம்: சமயோசிதமான நடவடிக்கையின் மூலம் எதையும் சமாளித்துக் கொள்வீர் இல்லறத்தில் அமைதி நிலவும் பூமியால் லாபம் உண்டு பேச்சு வார்த்தைகள் இன்று அதிக பயன்தரும்.

கும்பம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும் உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக் கொள்ளுவீர் அரசபயத்திற்கு இடமுண்டு வழக்கு விவகாரங்களில் ஈடுபடாது இருக்கவும்.

மீனம்; மதிவழி நடப்பின் மற்றவர்கள் பெருமைப்படும் அளவிற்கு முன்னேற்றமுண்டு விஞ்ஞானத்துறையில் ஆர்வம் உண்டு வாகனவிருத்தியும் வரவில் திருப்தியும் கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# வாளிக்குப்பதில் நீரடைப்பு

(புலோலி)

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை புலோலி உப-அலுவலக எல்லைக்குள் உள்ள வாளி மலகூடங்களை நீரடைப்பு மலகூடங்களாக மாற்றுமாறு இவ் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் பாவனையாளர்களைக் கோரியுள்ளார்.


யாழ். மக்களுக்கோர்
மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா? உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவுசெய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குறேஸ் ட்ரவல் சேர்விசஸ்
(பிறைவேற்) லிமிட்டெட்

கொலன்ட் வழியாக பிரான்ஸ் செல்வதற்கான சகல ஏற்பாடுகளுக்கும்

CROSS TRAVEL
SERVICES (PTE) LTD.
Stage II Model Market,
No. 5, 1st Foor,
BUS STAND CENTRE ROAD
JAFFNA
PHONE, 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 10,000/- ஒரு வழி பயணச்சீட்டு.

மிக குறைந்த கட்டணத்தில் சிறந்த, தெளிவான போட்டோ பிரதிகளை எடுக்கவேண்டுமா?
நகல் படிவங்களை,
1. அதே அளவில் (Same Size)
அல்லது
2. பெரிய அளவில் (Enlarged Size)
அல்லது
3 சிறிய அளவில் (Smaller Size)

Minolta Machine இல் பெற்றுக் கொள்ள எங்கள் சேவையை உடனே நாடுங்கள் பெரிய, சிறிய பிரதிகளுக்கு கட்டணத்தில் வேறுபாடு இல்லை.

ஏன்?
Minolta Photo Copier மெஷின்களையே பெற்றுக்கொள்ளவேண்டுமா?

விலை விபரம்:-
1 Minolta PPC Photo Copier Model EP 300 78,590-00
2 Minolta PPC Photo Copier Model 300 RE 88,600-00

விசேட சலுகையாக ரொக்க விற்பனைக்கு 10% வீதக் கழிவு வழங்கப்படும்.

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ் (குறேஸ் ட்ரவல் ஸ்தாபனத்திற்கு அருகாமையில்)
படப்பிடிப்பாளர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

உயிரோட்டமான படங்களை எடுப்பதில் உலகப்புகழ் வாய்ந்த Minolta கமராக்களை மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் பெறக்கூடிய இடம்

குறேஸ் ரெக்னிக்கல் சேவிஸ்

அரிய சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள் யாழ். நகரில் இதுவே கடைசித் தடவையாக காண்பிக்கப்படும்.

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-வாணிஸ்ரீ
**வசந்த மாளிகை**
(புதிய பிரதி)

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — K. R. விஜயா மாதவி, சுருளிராஜன் ஸ்ரீபிரியா மற்றும் பலர் திறம்பட நடித்த வர்ணப்படம்
**சத்திய சுந்தரம்**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 7-00
"IT COULD HAPPEN TO YOU"
A film on V. D.
(Strictly for Adults)
This film deals with Sexually Transmitted diseases. Patrons are advised that it contains scenes and subject matter which may be unsuitable for certain sensitive members of the public. EVERY TEENAGER above 18 years must not miss this film.
From: 12-11-83
CLASH OF THE TITANS
25ந் திகதி முதல்
**மூன்றும் பிறை**

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எஸ். எஸ். ஆர்
விஜயகுமாரி
**சாரதா**
10-11-83 முதல்
எம். ஜி ஆர் - சாவித்திரி
**வேட்டைக்காரன்**

**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா சோ, மனோரமா, தேங்காய், அசோகன் நடித்த
**"எங்கள் தங்கம்"**
(ஈஸ்ட்மன்கலர்)
எம்.ஜி.ஆர். ரசிகர்களுக்கு கடைசிச் சந்தர்ப்பம்

**சாந்தி** யாழ்.
10-30, 2-15, 4-45, 7-00
Nigel Terry Helen Mirren
**EXSALIBUR**
sex - thrill - color
11 முதல்
**ஊரும் உறவும்**
(கலர்)

**லிடோ** யாழ். நகர்
தினசரி
-30, 2-15, 6-30,
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்) தினசரி
10-30, 2-00, 4-30, 7-00
**36th CHAMBER of SHAOLINE**


## புதிய நிர்வாகிகள்

(எழுவைதீவு)

மணிவாசகர் சனசமூகநிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் ஆ. வே. நடராசா, உப-தலைவர் மு. கணபதிப்பிள்ளை, செயலாளர் கு. பாரதிதாசன், உப-செயலாளர் க. கேதீஸ்வரன், பொருளாளர் க. சிவனேசன், கணக்காய்வாளர் செ. பா. பரமலிங்கம், போஷகர் ச. வன்கேலிங்கம், நூலகப்பொறுப்பாளர் செல்வி கு. சிவகலாபதி, நிர்வாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் சி. குமாரசாமி, மு. குகனேசன், சி. தியாகராசா, க. சுரேந்திரராசா.


**லதா** (கொடிகாமம்-சவிக)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரிதா
**கீழ்வானம் சிவக்கும்**

**Rajah** Jaffna
Daily 10.30, 2.00, 4.30 and 7.00
This Film ran over 10 weeks in Colombo Great opportunity to see. Do not miss this
**Roy Scheder Jaws II**
(Color)

மீண்டும்...... ஒருசிறந்த சண்டைப்படம்
**நீகல்** (யாழ். நகர்)
இன்று முதல்
Daily 10-30 a. m. 2-15 4-45, 7-00 p. m.
Burt Lancaster...... in
FROM HERE TO ETERNITY
(War Film)
பிரசித்திபெற்ற அமெரிக்காவின் பேர்ல் துறைமுகத்தை யப்பானிய கடற்படையினர் குண்டு வீசி தகர்க்கின்ற சண்டைக்காட்சிகள் உங்களையே திடுக்கிட வைக்கும்.
(8 அகடமி விருதுகள் பெற்றசென்ற வருடத்தின் மிகச்சிறந்த சண்டைப்படம்)

# எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை—கோப்பாய்.

## 84 & 85 A/L CLASSES

| | | |
|---|---|---|
| இரசாயனவியல்: | திரு. ஜெகன் | SAT, SUN 4-15 P.M. |
| பௌதிகவியல்: | திரு. கலாபரன் | SAT, SUN 5-15 P.M. |
| விலங்கியல்: | திரு. தங்கராஜா | SAT, SUN 6-30 A.M. |
| தாவரவியல்: | திரு. சர்வானந்தா | WED 5-15 p.m. THU 4-15 p.m. |

9736

# "EMIECO ENGINEERS"

## 1984 பரீட்சைகள்

## C. E. I. CLASSES
## Part I & Part II

அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்களாலும் முகாமைத்துவ நிபுணர்களாலும் டிசம்பர் 1-ம் திகதி தொடக்கம் காங்கேசன்துறையில் வகுப்புகள் நடாத்தப்படும்.

மொத்தமாக 5 மாதங்களைக் கொண்ட இரண்டு தவணைகளில் பாடத்திட்டம் முற்றாக முடிக்கப்படும்.

தவணைக்கட்டணம் ரூபா 900/-


பின்வரும் முகவரிக்கு நவம்பர் மாதம் 15-ம் திகதிக்கு முன் கடிதமூலம் தொடர்புகொள்ளவும்.

EMIECO ENGINEERS
395, யாழ்ப்பாணம் வீதி,
எதிர் சிமெந்து தொழிற்சாலை
காங்கேசன்துறை. 9751

சினசஞ்சிகைகளுக்கு
## சந்தாகாரர் ஆகுங்கள்
1984 ஆண்டுக் கலண்டர் இனும்
முன்னர் தவறவிட்டவர்களும் இம்முறை சந்தாகாரராகி உடனேயே கலண்டரைப் பெறுங்கள்.
## பூபாலசிங்கம் புத்தகசாலை,
4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23631
(9741)

## எங்கள் புதிய வெளியீடுகள்
★ சிவாஜி (இரு வேடங்களில்)
★ சுஜாதா ★ ஸ்ரீபிரியா நடித்த **"தியாகி"**
(PYRAMID ORIGINAL)
★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா நடித்த
**"ஆயிரத்தில் ஒருவன்"**
(V. G. P. ORIGINAL)—கலர்
உங்கள் ஓடர்களை உடன் பதிவுசெய்து கொள்ளுங்கள். மேலும் புதிய பல வெளியீடுகளை (ORIGINAL COPIES) மிக விரைவில் எதிர்பாருங்கள்.
## குணம் வீடியோ சென்டர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (9786)

# ELECTRONICS CLASSES
TELEX OPERATORS
இரண்டு மாதம் 700/-
T V and ANTANNA TECHNOLOGY
இரண்டு மாதம் 500/-
ELECTRICAL WIRING
இரண்டு மாதம் 375/-
ELECTRONICS
மூன்று மாதம் 600/-
குறிப்பு: TELEX OPERATORS வகுப்பு
யாழ். மாவட்டத்தில் எமது கல்வி நிறுவனத்தில் மட்டுமே நடாத்தப்படுகிறது.
# KEEN INSTITUTE
(ELECTRONICS DIVISION)
மணியம்ஸ் கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



உங்கள் மங்கள வைபவங்களை
வீடியோவில் படம் பிடித்துக் கொள்ள
உத்தரவாதத்துடன் ரீ.வி ஏரியல்
அமைத்துக் கொள்ளவும்

வீனஸ்
226/1, ஸ்ரான்லி வீதி,
(ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.

நியூ வீனஸ்
79/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# எலிசபெத் மகாராணி இந்திய விஜயம்

புதுடில்லி நவ 8 பிரிட்டிஷ் மகாராணி 2 வது எலிசபெத்தும் அவரது கணவர் எடின்பரோ கோமகனும் இம்மாதம் 17ம் திகதி இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

மகாராணியார் அங்கு 10நாட்கள் தங்கியிருப்பதுடன், புதுடில்லியில் நடைபெறவுள்ள பொதுநலவமைப்பு நாடுகளின் மகாநாட்டிலும் கலந்துகொள்வார்.

இவர்களை வரவேற்பதற்கான ஒழுங்குகளை இந்திய அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. (வெ)

## அகதிகளுக்கு பண உதவி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. கடந்த ஜூலைமாத கலவரங்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்துள்ள பண்டத்தரிப்பைச் சேர்ந்த 24 அகதிகளுக்கு தலா 800ரூபா வீதம் பொத்தம் 19ஆயிரத்து 200 ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது வை. எம். சி. ஏ. தலைவர் ஆசிரியர் சு. இரத்தினவேல் தலைமையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் வண. சாம் தம்பு அடிகளார் மேற்படி 24 அகதிகளுக்கும் கையளித்தார். அத்துடன் பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள வசதியற்ற ஏழைப் பிள்ளைகளுக்கும் தனித்தனியாக ஒவ்வொரு தொகைப் பணம்இவ்வைபவத்தின்போது வை. எம். சி.ஏ.யினல் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## இப்படியும் நடக்கிறது

அது ஒரு சின்னஞ் சிறிய தீவு.

இத்தீவின் ஆங்கில ஆசிரியர்களின் மொத்தத் தொகை எண்ணாயிரம். இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த ஆங்கில ஆசிரியர்களில் இரண்டாயிரம் பேருக்கு ஆங்கிலம் தெரியாது!

அதாவது இவர்களுக்கு ஆங்கிலத்தைச் சரியாக எழுதவும் தெரியாது; பேசவும் தெரியாது! பேர் மட்டும்தான் 'இங்கிலிஷ் ரீச்சர்'!

வெளியே சொல்லாதீங்க; வெட்கக்கேடு! இந்தச் சின்னஞ் சிறிய தீவின் பெயர் இலங்கைதான். இந்தக் கண்டுபிடிப்பை உத்தியோகபூர்வமாக வெளியிட்டவர் கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

— ஊடுருவி

# அம்புலன்ஸ் 'இடமாற்றம்'
## ஆஸ்பத்திரி அபி. சங்கம் எதிர்ப்பு!

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் உள்ள 'அம்புலன்ஸ்' வண்டியை வேறு ஆஸ்பத்திரிப் பாவனைக்கு ஒப்படைத்தால் சத்தியாக்கிரகம் அனுஷ்டிக்கப் போவதாக மேற்படி ஆஸ்பத்திரி அபிவிருத்தி சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நீண்ட நாட்கள் கோரிக்கை விடுத்த பின்னர் அண்மையில் இந்த ஆஸ்பத்திரிக்கு கிடைத்திருந்த இந்த 'அம்புலன்ஸ்' வண்டியை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு யாழ். சுகாதார சேவைகள் அத்தியட்சகர் அறிவித்ததை அடுத்தே சங்கம் மேற்கண்டவாறு முடிவு செய்தது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் அடிக்கடி ஏற்படும் விபத்துக்களினல் பாதிக்கப்படுபவர்களும் கர்ப்பிணிகளும் இந்த ஆஸ்பத்திரிக்கு வருவதால் இவர்களில் கடுமையானவர்களை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டி உள்ளது. எனவே இந்த 'அம்புலன்ஸை' வேறு ஆஸ்பத்திரிக்கு மாற்ற வேண்டாம் என்று யாழ். சுகாதார சேவைகள் அத்தியட்சகர், யாழ். அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட அமைச்சர் ஆகியோரிடம் மகஜர் மூலம் சங்கம் கோரியுள்ளது. (கு)

# யாழ். பொது நூலகத்தில் மலசல, குடிநீர் வசதியில்லை
## பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூல்நிலையத்தில் மலசலகூடம், குடிநீர் போன்ற வசதிகளில்லாததால் வாசகர்களும் அங்கு கடமையாற்றும் ஊழியர்களும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

இந்த நூல் நிலையம் எரிக்கப்பட்டபின்னர், ஒரு பகுதி திருத்தி அமைக்கப்பட்டு அங்கு நூல் நிலையம் இயங்கி வருகிறது.

நூல்நிலையம் திருத்தியமைக்கப்பட்டபோது அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கென ஒரு மலசலகூடம் அமைக்கப்பட்டிருந்தது. இதுதற்போது பூட்டப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் பாவனைக்கிருந்த பழைய மலசலகூடம், புதிதாகக் கட்டப்பட்டுவரும் நூல் நிலையத்தின் எல்லைக்குள் அமைந்திருந்ததால் அது அழிக்கப்பட்டு விட்டது.

அவசரத்துக்குக்கூட நீர் அருந்த முடியாத நிலை இங்கு இருக்கிறது.

ஆறுமாதங்களுக்கு முன்னர் யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்கள் நீர் தாங்கி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள போதிலும் இதுவரை எந்த முடிவுகளும் எடுத்ததாகத் தெரியவில்லை. (மா-கு)

## பார்த்தசாரதி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி திரு ஜி.பார்த்தசாரதி இன்றுதாயகம் பயணமாகிறார்

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வுகாணும் வழிவகைகள் குறித்துஆராய்வதற்காக இங்கு மீண்டும் வந்த திரு பார்த்தசாரதி ஜனதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தனவைநேற்று இரண்டாவது தடவையாகச் சந்தித்தார். (கு)

# 18 சதம் கொள்ளைலாபம் அபராதமோ ரூ. 1,250!

(யாழ்ப்பாணம்)

ஐந்து ரூபா ஏழு சதத்துக்கு விற்கவேண்டிய மைசூர் பருப்பை 18 சதம் கூட விற்ற கடைக்காரர் ஒருவருக்கு, 1250 ரூபா அபராதமும், 5 வருஷத்துக்கு 4 கிழமை ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட வியாபாரத் திணைக்கள அதிகாரிகளினல் தெல்லிப்பழையிலுள்ள கடைக்காரர் ஒருவர் கட்டுப்பாட்டு விலையை மீறி மைசூர் பருப்பை விற்பனை செய்ததாக மல்லாக மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி சி.வீ.விக்னேஸ்வரன் சம்பந்தப்பட்ட கடைக்காரருக்கு மேற்குறிப்பிட்ட அபராதம் விதித்தார்.

(மா)

## ரூ. 500 அபராதம்

(யாழ்பாப்ணம்)

ஐந்து சதம் லாபம் வைத்து 'ஒறேஞ்பார்லி' குளிர்பானம் விற்றகடைக்காரர் ஒருவருக்கு 500ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள தனியார்வைத்தியசாலை ஒன்றில் கடைவைத்திருக்கும் ஒருவருக்கே இக்கதிநேர்ந்தது.

ஒறேஞ்பார்லி குளிர்பானம் கொண்ட ஒருபோத்தலின் கட்டுப்பாட்டு விலை 2ரூபா45சதம். குறிப்பிட்ட கடைக்காரர் 2 ரூபா 50 சதமாக விற்றதாக யாழ். மாவட்ட வியாபாரத் திணைக்கள அதிகாரிகளினல் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில், வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நீதிபதி சி.வி.விக்னேஸ்வரன் அவருக்கு மேற்குறிப்பிட்ட அபராதம் விதித்தார்.

## "வழக்கம்பரை ச. ச. நிலையத்தின் சைவப்பணி போற்றத்தக்கது"

(சுழிபுரம்)

"சைவ ஒழுக்கப் பண்பை அழியவிடாது காக்கும் பணியில் முன்னின்று உழைக்கும் வழக்கம்பரை சனசமூக நிலைய பஜனைச்சபையின் பணியை ஏனைய சைவசபைகளும் பின்பற்றவேண்டும். பரந்த அளவில் இல்லாவிட்டாலும் ஓர் குறுகிய இடத்தில் இருந்து செய்யும் நல்லபணிகள் போற்றத்தக்கதாகும். பஜனைச்சபையினர் கந்தரநுபூதி, அபிராமி யந்தாதி, திருமுறைகள் ஆகியவற்றை பரப்பும் பணியில் தொண்டாற்றி வருவது யாவராலும் பாராட்டத்தக்கதாகும்."

இவ்வாறு தொல்புரம் ஒதுவார் மு. கிருஷ்ணபிள்ளை வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெற்ற சமய தீட்சை வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார். பதினைந்துபேர் தீட்சை பெற்றனர்.

சிவத்திரு கை. திருஞானசம்பந்தக் குருக்கள், திரு. க. வாமதேவன் ஆகியோரும்உரையாற்றினர்.

## விண்ணப்பங்கள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேசன்நேசையாவின் அந்தஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவத்துடன் மூன்று புகைப்படப் பிரதிகளும், தேசிய அடையாள அட்டையும், (16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குப் பொருந்தும்) பிறப்புச் சான்றிதழும், கிராமசேவகரின் நற்சாட்சிப் பத்திரமும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அடையாள அட்டை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் திருப்பி வழங்கப்படும். கடவுச்சீட்டு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுவதற்கான ரூபா 3-50 பெறுமதியான ரத்துச் செய்யப்படாத முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறை ஒன்று (8/5) விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும். ரூபா 100/- பெறுமதியான முத்திரைகள் 2-ம் பக்கத்தில் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரரின் கையொப்பத்தைக் கொண்டு அல்லது முறையே அத்தாட்சிப் படுத்தப்பட்ட இடது கைப்பெருவிரல் அடையாளத்தைக் கொண்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். உருவழிந்த அல்லது உபயோகித்த முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் சரிபார்க்கப்பட்டு கொழும்பு குடியகல்வு குடிவரவுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு அக்காரியாலயத்திலிருந்து தபால் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு படிவத்தில் கொடுக்கப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படும்."

## எதிர்க்கட்சி..-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவுசெய்யப்பட்ட திரு. அநுரா பண்டாரநாயக்காவின் நியமனத்தை நேற்று பாராளுமன்றம் கூடியபோது சபாநாயகர் திரு.ஈ. எல். சேனநாயக்கா அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா புதிய எதிர்க்கட்சித் தலைவரை பாராட்டி சபையில் உரையாற்றினர்.

'ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு அமைய செயலாற்றி வருபவர் திரு. பண்டாரநாயக்கா. சுதந்திரக்கட்சி ஆரம்பிக்கப் பட்டதன் நோக்கத்தை அறிந்து உரிய முறையில் செயலாற்றி வருகிறார்' என்று பிரதமர் தனதுரையில் குறிப்பிட்டார். (கு)

## இந்திராவை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பாடு செய்துகொள்வதற்கான ஒரு நடவடிக்கையாகும். அ.தி.மு.க.வினர் எந்தக் கொள்கையினை ஆரம்பததில் எதிர்த்தார்களோ அதேகொள்கையினைத்தான் இந்திரா காங்கிரஸ் இன்னும் பின்பற்றிவருகிறது."

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு சித்தன் பேசுகையில் இலங்கைத்தமிழர் பிரச்னையில் திருமதி இந்திராகாந்தி எடுத்து வரும் முயற்சிகளுக்கு திரு எம். ஜி. ராமச்சந்திரன் அளித்து வரும் ஆதரவினை ஆதரித்துப் பேசுனர்.

எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த முதல் அமைச்சர் திரு. எம்.ஜி.ராமச்சந்திரன் பேசுகையில், "இந்திரா காங்கிரசுடன் உடன்பாடு செய்துகொள்வதற்காக எவருடனும் அ.தி.மு.க. பேச்சு நடத்தவில்லை." [கு]

## வீதி விபத்துக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவேண்டுமென்றும் யாழ். பொலிஸ் அதிபர் கேட்டுள்ளார்.

இதுசம்பந்தமான சுற்று நிருபம் ஒன்றை யாழ். மாவட்டத்திலுள்ள கல்லூரி அதிபர்கள், மாநகர, நகர, பட்டின சபைகளின் அதிகாரிகளுக்கு அவர்அனுப்பி வைத்துள்ளார்.

வீதிகளில் சைகை காட்டும் அடையாளங்களைப் பொறிப்பதுடன், போக்குவரத்துச் சம்பந்தமான அறிவிப்புப் பலகைகளையும் உடனடியாக அமைக்கும்படியும் யாழ். பொலிஸ் அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதேநேரத்தில் அந்தந்தப் பகுதிகளிலுள்ள போக்குவரத்துவிதிகளை அனுசரிக்கும் கற்பித்தல் முறைகளைப் பொலிஸ்-பொதுமக்கள் தொடர்பு சபையின் பொறுப்பதிகாரி திரு.கே. புண்ணியமூர்த்தி பொலிஸ் அதிபரின் பணிப்பின்பேரில் மேற்கொண்டுள்ளார்.

சாரதிய லைசென்ஸ் பெறுவதற்கு வாகனம் ஓட்டிப்பழகுபவர்களுக்கு யாழ். பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி இ. சுதேசநாதன் போக்குவரத்து விதிகள்பற்றி வகுப்புகள் நடத்தி வருகின்றார். இதற்கு யாழ். பொலிஸ்நிலைய தலைமைக்காரியாலயப்பொறுப்பதிகாரி ரஞ்சித் சில்வாவும் அனுசரணையாக இருந்துவருகிறார்.

வீதி விபத்துக்களை எப்படித் தவிர்க்கலாம் என்று பொதுமக்கள் ஆலோசனை வழங்குமாறும் பொலிஸ் அதிபர் ஆனந்தராசா வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரத்தில் ஏற்படும் வீதிவிபத்துக்களைத் தவிர்ப்பதற்கு யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி வீ.கே. சிவஞானம், போக்குவரத்துப் பிரிவுப் பொலிசாரின் ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட சில நடவடிக்கைகள் எடுத்துவருவது குறிப்பிடத்தக்கது.

# வான் மோதி வயோதிபர் ஆஸ்பத்திரியில்!

(புலோலி)

வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வயோதிபரொருவரை மோதிய வான் வண்டியொன்று மின்னல் வேகத்தில் ஓடி மறைந்ததாம். பலத்த காயங்களுக்குள்ளான வயோதிபர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு அருகாமையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது. நெல்லண்டையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை என்பவர் வீட்டிலிருந்து பருத்தித்துறையை நோக்கிச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது வேகமாக வந்த வான் வண்டியொன்று அவருடன் மோதியதாம்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், வெலிகோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81. Eelanadu-P. O. Box 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126